# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் – 72 | April- 2021 | Email : theepamlink@gmail.com | TP: 026 2221022/ 026 2054362 | Rs. 30/=


## கத்தோலிக்க குருத்துவம் தனித்துவமானது

### திருத்தைல மந்திரிப்பு திருப்பலியில் திருமலை ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

இவ்வருடத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் அருளடையாளங்களில் பாவிக்கப்படவிருக்கும் திருத்தைலங்களை மந்திரிப்பு செய்யும் சிறப்புத் திருப்பலியினை மறைமாவட்ட குருக்கள், துறவிகள், பொதுநிலையினரோடு இணைந்து புனித மரியாள் பேராலயத்தில் நிறைவேற்றிய ஆயர் பேரருட்திரு




நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் கத்தோலிக்க குருத்துவத்தின் தனித்தன்மையினையும் மாண்பினையும் தம் மறையுரையில் விளக்கினார். தடம்புரளும் தற்கால வாழ்வினையும் அதனால் பாதைமாறும் பணிவாழ்வில் ஏற்படக்கூடிய ஆபத்தினையும் சுருக்கமாக கூறிய ஆயர் அவர்கள் தொடர்ந்து கத்தோலிக்க குருத்துவத்தின் ஐந்து பண்புகளை குறிப்பிட்டு அதன் தனித்துவமான அழைப்பினை விளக்கினார்.

**கத்தோலிக்கத் திருச்சபையில் ஒரு குருவானவர்:**

1. ஆன்மீக வழிகாட்டி (Spiritual leader)
2. நற்செய்தி அறிவிப்பாளர் (Evangelizing leader)
3. வழிபடும் குழுமத்தின் ஊக்குவிப்பாளர் (Animator of a Worshipping Community)
4. சமூகத்தைக் கட்டியெழுப்புபவர் (Community builder)
5. ஒப்புரவின் முகவர்/ஏற்பாட்டாளர் (Agent of Reconciliation)



## மறைமாநில ஆயரின் உயிர்ப்பு விழா செய்தி

இனிய வாசகர்களே!

உயிர்ப்பு இயேசுவின் நல்வாழ்த்துக்கள்!



கிறிஸ்துவின் பாடுகள் மரணம் பற்றி நாம் தியானித்து வழிபாடுகளில் கலந்துகொண்டு உயிர்ப்பின் மகிமையைப் போற்றுகின்றோம். கொழும்பிலும் மட்டக்களப்பிலும் 2019 ஏப்ரல் மாதம் நடைபெற்ற குண்டு வெடிப்பின் தாக்கம் இரண்டு வருடங்கள் கடந்தும் இன்னும் பாதிக்கப்பட்டோரின் நினைவுகளிலும் உள்ளங்களிலும் உள்ளது. இந்நிலையில் இதுபோன்று மூன்று தசாப்தங்களாக தம் சொந்தங்களை இழந்து, உடமைகள் இழந்து, இல்லத்தையும் ஊரையும் விட்டுவிட்டு நாடோடிகளாக புலம்பெயர்ந்து வாழ்ந்த மக்களுக்குக் குரல்கொடுத்த மகானை வடகிழக்கு இழந்து நிற்கின்றது. மன்னார் மறைமாவட்ட முன்னைநாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னாரில் இருந்தவண்ணம் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுத்தவர். பெரிய வியாழன் அன்று இறந்த இவரை தமிழ்பேசும் நல்லுலகம் இழந்து நிற்கின்றது.

"தன் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13). அடுத்தவர் வாழ குரல் கொடுத்து மரணிப்பதென்பது கிறிஸ்தவம் நமக்குத் தரும் பாடம்.

நமதாண்டவர் இயேசு தன் பணிவாழ்வின்போது மக்களின் தேவை அறிந்து பணிசெய்தவர். தன் போதனைகள் மூலம் நல்வாழ்விற்கான ஆன்மீக வழிகாட்டி, நோயாளிகளைக் குணமாக்கி, பேய்களை ஓட்டி பசித்தோருக்கு அப்பம் பலுகச் செய்து, பாவிகளை மன்னித்து இறைத் தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தியவர் இயேசு.

(2ம் பக்கம்)

## இறையிரக்கத் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா – 2021

யாழ் அமலமரித்தியாகிகள் சபையின் வழிநடத்தலில் இடம்பெற்ற பங்குப் புதுப்பித்தல் நிகழ்வின் நீட்சி வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்தமாக அமைந்திருந்தது. அதன்படி அமல மரித்தியாகிகள் சபையின் குருக்களின் நவநாள் இறைவார்த்தைப் பகிர்வுகளோடும் பல்வேறு குழுச் செயற்பாடுகளோடும் ஆயத்தப்படுத்தப்பட்ட திருத்தலத்தின் திருவிழா



சித்திரை மாதம் 11ம் திகதி 2021 ஞாயிறன்று, மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையிலான திருவிழாக் கூட்டுத்திருப்பலியுடன் இனிதே நிறைவுற்றது.



**இம்மாத மேற்கோள்கள் திருத்தந்தை பிரான்சிஸின் எழுத்துக்களிலிருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பக்க தொடர்ச்சி.....

அனைத்திற்கும் மேலாக உலகத்தைப் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்பதற்காக தன் பாடுகள், மரணம், உயிர்ப்பை முன்னறிவித்து சிலுவையை விரும்பி ஏற்று தனது மரணத்தின் மூலம் தனது அன்பை வெளிப்படுத்தினார். "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய வேண்டும்" (யோவா 13:34) எனும் புதிய சிறப்பான கட்டளையையும் தன் சீடர்களுக்குக் கொடுத்தார். இறை - மனித அன்பில்தான் கிறிஸ்தவ கட்டளைகளின் சாரம் அடங்கியுள்ளது. இக்கட்டளை பல கோணங்களிலும் வெளிப்படுகின்றது என்பதே உண்மை. "கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (1யோவ 4:20) பகைவரையும் அன்பு செய்ய வேண்டுமென்பது நமது ஆண்டவரின் போதனை.



நமது ஆண்டவர் எமக்குத் தந்த அன்பின் போதனையையும் வாழ்ந்து காட்டிய அன்பின் பாடத்தையும் தனதாக்கி வாழ்ந்து காட்டியவர் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை. ஆண்டவர் இயேசுவிடம் மக்கள் திரளாகத் தேடிவந்த போது "ஆயனில்லா ஆடுகள் போல இம்மக்கள் இருக்கிறார்கள்" என்றார். அரசியல் அழுத்தங்கள், இராணுவத்தின் கோரப்பிடி, அரசியல்வாதிகள் கைவிட்ட நிலை, சமூகத் தலைமைகள் சிதறுண்ட நிலையில் செய்வதறியாது, போவது தெரியாது காலத்திற்குக் காலம் ஊர் ஊராகப் புலம் பெயர்ந்த மக்களை கவனிக்கவோ பாதுகாக்கவோ, அடைக்கலம் கொடுக்கவோ, இவர்களுக்காக குரல் கொடுக்கவோ யாரும் வரவில்லை. அவ்வாறு முன்வந்தவர்கள் பயங்கரவாதிகள் அல்லது பிரிவினைவாதிகள் என முலாம் பூசப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். பலர் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். சிலர் கொல்லப்பட்டார்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டார்கள். இம் மக்களுக்காகப் பணிசெய்து குரல் கொடுத்த பல குருக்களே கொல்லப்பட்டார்கள்.

"ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவர்க்கே அஞ்சுங்கள்" (மத் 10:28) இயேசு நமக்குத் தரும் செய்தி இது. கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலக வாழ்வு நிரந்தரமற்றது மாறாக நிலைவாழ்வை எமதாக்க நாம் இவ்வுலகில் வாழும்போதே எமது நல்வாழ்வின் மூலம் நிலைவாழ்விற்கான செல்வங்களை சேர்த்து வைக்க வேண்டும்.

மறைந்த ஆயரின் இறப்பால் துயருற்றோர் பலர். இவர் பல வருடங்களாக ஓய்வு நிலையில் இருந்து சுகவீனமுற்றிருந்து இறந்தாலும் இவரது மரணத்தின் போது வந்த அனுதாபச் செய்திகள், கண்ணீர், இரங்கலுரைகள், இவரது உடலைப் பார்த்து மரியாதை செலுத்த வந்த ஆயிரக்கணக்கான மக்கள், நன்றிப் பெருக்கோடு மரியாதை செலுத்த வந்த பிறமத சகோதர சகோதரிகள் - ஆயரின் பணிக்கு இவை சிறந்த சான்றாகும். ஆயனில்லா ஆடுகளைப் போல துன்புற்ற மக்களைத் தேடிச்சென்று சாதி, மதம் பாராது உதவியவர் எமதாயர். "இந்த இடத்தில் பிரச்சினையாம், உடனேயே அங்கு போங்க" என்று பணித்துவிட்டு நாம் போவதற்கு முன்பாகவே ஆயர் வந்துவிடும் சம்பவங்களை ஆச்சரியத்தோடு சான்று பகர்ந்தனர் மன்னார் மறைமாவட்டக் குருக்கள்.



இக்காலத்தில் மக்களுக்காகக் குரல்கொடுப்பது இலகு. யுத்தமில்லாக் காலமிது எனவே அழுத்தங்கள் குறைவாகவே இருக்கும். ஆனால் யுத்தக் காலங்களில் யார் மக்களுக்கு சார்பாகக் குரல் கொடுத்தாலும் அரசுக்கு எதிராகப் பேசுவதாகவும் பிரிவினைக்கு சார்பாகப் பேசுவதாகவும் முலாம் பூசப்பட்டு காணாமற்போன பலசம்பவங்கள் உண்டு. காரணமில்லாமல் தமது சொந்தங்களைப் பறிகொடுத்த உறவுகள், காரணமின்றி விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமது உறவுகளுக்காக இன்றும் தொடர் உண்ணாவிரதம் இருக்கும் பலர். இவர்கள் நிலைகண்டு இவர்களுக்கு விமோசனம், நீதி கிடைக்க வேண்டுமென ஆயர் செயல்பட்டுள்ளார். இவர்களுக்கு நீதி கேட்டு ஐக்கிய நாடுகள் வரை குரல்கொடுத்துள்ளார். துரதிஷ்டவசமாக ஆயரின் குரல் தனித்த குரலாகவே ஓங்கியுள்ளது.

இவ்வுலகம் பகைமையை அழித்து அன்பை நிலைநாட்டுவதற்குப் பதிலாக பகைவரை அழித்து பேரவலங்களை உருவாக்கி தமது சுயநல இலாபங்களையே தேடித்திரிகின்றது. உயிருக்கு எவ்வித மதிப்பும் இல்லாமற் போய்விடுகின்றது. இந்நிலையில் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பது காலத்தின் தேவையாகவும் கட்டாயமாகவும் உள்ளது. ஆயரது வழியில் நாம் எம்மருகில், எமது ஊரில் இருப்போரை உயர்த்தி விட பாடுபடுவோம். இறைவன் எம்மையே தனது கருவியாகப் பயன்படுத்துகின்றார். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத் 25:40) அடுத்திருப்பவர் யாராக இருந்தாலும் அவர்களை இறைவனின் பிள்ளைகளாகவும் எம் சகோதரர் சகோதரிகளாகவும் மதித்து அன்பு செய்வோம். மறைந்த ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு தமிழ் உலகிற்கு ஆற்றிய பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவரது ஆன்மா சாந்தியடைய மன்றாடுவோம்.

2019 ஏப்ரல் மாதம் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நடைபெற்ற குண்டு வெடிப்பினால் பலர் கொல்லப்பட்டும் காயப்பட்டும், சொந்தங்களை இழந்தும் துன்புறுகின்றனர். அடிபட்டவனுக்குத்தான் அதன் வலி தெரியும் என்பார்கள். அன்று எமக்கு நடைபெற்றது இவர்களுக்கும் நடந்துள்ளது. இதுபோன்ற விளைவுகளால் நாமும் அவர்களும் துன்புறுகின்றோம். இவர்களுக்கு ஆறுதலாக இருக்க வேண்டியது எமது கடமையல்லவா?

உலகில் எந்த மூலையிலும் யார் துன்புற்றாலும் அவர்களுக்காக நாம் செபித்து யாவரும் நலமே வாழ ஆசிப்போம்.

அன்புடன்

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.**

---

## இறைஇரக்கத் திருத்தலத்தில் ஆன்மீகப் புதுப்பித்தல் நிகழ்வு







**அர்த்தமுள்ள உயிர்ப்பினைக் கொண்டாடுவோம் என அலஸ்தோட்டம் இறைஇரக்கத் திருத்தலப் பங்குச் சமூகம் அமலமரித்தியாகிகள் சபையின் குருக்களின் வழிகாட்டலில் விசேட பங்கு புதுப்பித்தல் நிகழ்வினை இவ்வருட தவக்காலம் முதல் உயிர்ப்பு மற்றும் ஆலய திருவிழா வரை முன்னெடுத்தது. பங்குத்தந்தை அருட்பணி. செ. மதுராங்கன் குரூஸ் அவர்களின் அழைப்பின் பேரில் இவ் ஆன்மீக நிகழ்வுகளை யாழ் அமலமரித்தியாகிகள் சபையின் குருக்கள் தலைமையேற்று, குடும்பத்தரிசிப்பு, சிறு குழுக்கள் சந்திப்பு, இளையோர், பெற்றோர் புதுப்பித்தல் கூட்டங்கள் என்று பல்வேறு நிகழ்வுகள் வழியாக சிறப்பாக நடாத்தி முடித்தனர்.**

"கடவுளுக்கு உகந்த முறையில் செய்யப்படும் எந்த செயலும், அனுபவிக்கும் எந்த துன்பமும் வீண் போகாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லறை ஒன்று கருவறையானது

துளிர்க்கும் உயிர்கள் வளரமுன்னமே
கருக்கப்படும் கொடிய கொலைக்களங்களாக
கருவறைகளை மாற்றியமைத்து,
கருக்கொலைகளை அரச சட்டமாக்கி,
உயிர்களைக்கொல்வதையும் மனித உரிமையாக்கி,
எதிர்க்க முடியா கருக்களை
கசக்கிப் பிழிந்து குப்பையாக்கும்
இக்காலச் சமுதாயத்திற்கு
கருவறைகளைக் கல்லறையாக்குவதுதான் இயன்ற செயல்.
இத்தனை கருவறைகளை கல்லறையாக்கும் இச்சமூகம்
ஒரு கல்லறையையாயினும் கருவறையாக்க முடியுமா?
"ஓ முடியுமே!" என்று ஆரவாரித்தவர்கள்
அழகிய பிணங்களை வைத்துக்கொண்டு
'அழுது ஜெபிப்பதாய்' வீட்டையும், சுற்றத்தையும் நாறவைத்து
காவல்துறையால் கைதுசெய்யப்பட்டு
உளவியல் உதவிக்கு அனுப்பப்பட்ட கதைகள்தான் மிச்சமாய் இருக்கின்றது
இத்தனை மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட
விஞ்ஞானத்திற்கும், கண்டுபிடிப்புகளுக்கும் எட்டாத
ஓர் அதிசயத்தை ஒரு தடவை உலகம் சந்தித்தது.
இதனால் தான் 2000ம் வருடங்களுக்கு முன் நடந்த
கல்லறை ஒன்று கருவறையான நிகழ்வை முழு உலகமும்
மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றது.



"எல்லாம் நிறைவேறிற்று" (யோவான் 19,30) என்று
இறக்கும் போது இயேசு சொன்னதை
"எல்லாம் முடிந்துவிட்டது" என்பதாக திரித்து
பிரச்சாரம் செய்தது 'அக்கால' சமயத்தலைமை(கள்)
அவர்களின் கவர்ச்சிப் பிரச்சாரத்தில் மயங்கி
உண்மையின் ஆடையுடுத்திய பொய்யை கொண்டாடினார்கள்
உணர்ச்சிவசப்பட்ட நம்பிக்கையாளர்கள்:
"இந்நாள்வரை இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது." (மத் 28,15)
கருவறைகள் கல்லறையாவது அவர்கள் அறிந்ததே! எனவே
அதுபோன்ற செய்தியை கேள்வியின்றி ஏற்றுக்கொண்டவர்களுக்கு,
கல்லறையொன்றில் ஓர் உயிர் கருவாகியுள்ளது என்பது
ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல, புரிந்துகொள்ள முடியாததுமாயிருந்தது.
அதனாலேயே இயேசுவின் சீடர்களும் உயிர்ப்பின் செய்தி கேட்டபின்னும்
("எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர்...
அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து,
வானதூதர்களைக் கண்டதாகவும், இயேசு உயிரோடிருக்கிறார் என்று
அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள்" லூக் 24, 22 – 23)
"இதெல்லாம் நம்பும்படியாவா இருக்கு?" என்று கேட்டவர்களாய்
தத்தம் பணிசெய்ய, தம் பழைய வழிகளுக்கு திரும்பினர்.
ஆனால் உயிர்த்த இயேசு அவர்கள் நடுவில் நின்றார்.
அவர்கள் கண்களைத் திறந்தார்.
அவர் அவர்களோடு இருப்பதைக் காணச் செய்தார்.




ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சிகொண்டார்கள்.
அந்த மகிழ்ச்சியை தம் போதனையின் உரமாக்கினார்கள்.
கல்லறையொன்று கருவறையான புதுமையை பறைசாற்றினார்கள்.
உயிர்ப்பின் நம்பிக்கையில் சபையைக் கட்டியெழுப்பினார்கள்
("கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால்
நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற
நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்" 1 கொரி 15,14)
இவ்வாறு,
கல்லறையில் கருவானது ஓர் உயிரல்ல
ஓராயிரம் கோடி உயிர்கள் – அவை
இன்றும் உலகை தம் நம்பிக்கையால் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.
தொடர்ந்தும் உயிர்ப்பிக்கட்டும்.

ஆசிரியர்

## படித்ததில் பிடித்தது

# வலி நோவு



ஆழ்கடல்.
சிப்பிகள் இரண்டு சந்தித்துக் கொண்டன.

ஒரு சிப்பி வருத்தத்தோடு செபித்தது:
"என் உடம்பெல்லாம் ஒரே வலி
என் வயிற்றுக்குள்ளேயும் கடும் வலி.
கடவுளே உமக்கு நன்றி..."

இன்னொரு சிப்பி மகிழ்வோடு செபித்தது:
"எனக்கு அப்படி ஏதும் வலியே இல்லையே!
கடவுளே உமக்கு நன்றி..."

நாட்கள் நகர்ந்தன.
வலியோடு திரிந்த சிப்பி வயிற்றில் முத்தை ஏந்தியது.

வலியற்றுத் திரிந்த சிப்பி
வயிற்றில் தொப்பையை ஏந்தியது.


நடந்ததைக் கண்டு நண்டு நடந்துகொண்டே சொன்னது.
"வலியே வரம் தரும்"

**வலியின் வழிதான் ஒளி...**

**பெரிய வெள்ளியைக் கடந்துதான் உயிர்ப்பு ஞாயிறு.**

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட்

## தவக்கால தியானம் – அலஸ்தோட்டம் இறை இரக்கத்திருத்தலம்



அலஸ்தோட்டம், இறை இரக்கத்திருத்தலத்தில், பங்குத்தந்தையும், மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனருமான அருட்பணி S. மதுராங்கன் குரூஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்களுக்கான தவக்காலத் தியானம் அருட்பணி சேவியர் ரஜீவா அடிகளாரால் நடாத்தப்பட்டது. தனது வாழ்க்கை அனுபவங்களோடும் விவிலிய வார்த்தைகளின் உதவியுடனும் தந்தையவர்கள் உரையாற்றினார்கள். இதில் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

**கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் – இறைஇரக்கத்திருத்தலம்**

"நம்பிக்கை கொண்டவர்கள் தங்களின் முழு வாழ்க்கைப் பயணத்தையும் உயிர்த்த இயேசுவின் ஒளியோடு பார்க்கிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன்னுமா தயக்கம் – 17

# முடிவுகளே தொடக்கம்!

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே மீண்டும் உங்களை திருமலை தீபம் இதழ் வாயிலாக சந்திப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறோம். தவக்காலத்தைக் கடந்து உயிர்ப்புக் காலத்தில் நுழைந்துள்ளோம். இந்த உயரிய உயிர்ப்புக்காலம் நம் துன்பங்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் நமக்குத் தரும் உயிர்ப்பாக இருக்க உங்களை வாழ்த்துகிறோம்.

பாவங்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் அதன் வழியாக துன்பங்களிலிருந்தும் நாம் உயிர்க்க வேண்டும் என்பதே திருஅவை வாயிலாக இறைவன் நமக்கு விடுக்கும் அழைப்பாகும். இந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கான வழியையே நாம் தொடர்ந்து இந்த மனித வாழ்வில் தேடிக் கொண்டிருக்கின்றோம். பலர் பல வழிகளை நமக்குச் சொல்லிச் சென்றிருக்கின்றார்கள். ஆனாலும் நாம் இயன்றளவும் அதைத் தேடிக் கொண்டு தான் இருக்கின்றோம். இந்தக் கட்டுரையில் இன்னுமொரு வழியைப் பற்றி சிந்திப்போம்.

### நமது முடிவுகளுக்கு நாமே பொறுப்பாளிகள்:

“தீதும் நன்றும் பிறர் தர வாரா!” என்ற பதத்தை நாம் கேள்விப்பட்டிருப்போம். “மனித வாழ்வில் துன்பம் என்பது தனக்குத் தானே உருவாக்கிக் கொள்வதேயன்றி பிறர் தருவதல்ல!” என்பதே இதன் பொருளாகும். நமது வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களையும் நாம் முடிவு செய்தே நிறைவேற்றுகின்றோம். சில முடிவுகளை நன்றாக ஆய்ந்து முடிவு செய்கின்றோம், சிலவற்றை பார்த்தவுடனே முடிவு எடுத்துவிடுகின்றோம். சில முடிவுகளை நாம் எடுப்பதற்குப் பதிலாக மற்றவர்களின் கருத்துக்களுக்கு விட்டுவிடுகின்றோம். இவ்வாறு நாம் எடுக்கும் முடிவுகள் தாம் நம் வாழ்வில் பல திருப்பு முனைகளை ஏற்படுத்துகின்றது அந்த திருப்பு முனைகள் நல்ல பாதையில் திரும்பினாலும் சரி, தீய பாதையில் திரும்பினாலும் சரி, அதன் விளைவுகளை நாம் தான் சந்தித்தாக வேண்டும். எனவே நாம் எடுத்த முடிவுகளுக்கு நாம் மட்டும் தான் பொறுப்பேற்க முடியும்.



### நம்மை கவரும் மாயைகள்:

ஒரு சிறுவன் தன் தாயின் கையைப் பிடித்துக் கொண்டு கூட்டத்தில் நடந்து செல்கின்றான். திடீரென்று அவனுக்கு முன் ஒரு இளைஞன் தன் கையில் ஒரு ஐஸ்கிரீமைக் கொண்டு வந்து அவனை அழைக்கின்றான். அந்த இளைஞனின் பின் செல்லவேண்டுமென்றால் அம்மாவின் கையை தட்டிவிட்டு அம்மா செல்லும் திசைக்கு எதிர் திசையில் செல்ல வேண்டும். அம்மாவின் கையா, அந்த இளைஞன் வைத்திருக்கும் ஐஸ்கிரீமா? அவனது மனதில் பெரும் போராட்டம். இறுதியாக ஐஸ்கிரீம் ஜெயிக்கின்றது. அம்மாவின் கையைத் தட்டிவிட்டு வேகமாக ஓடிச் சென்று அந்த இளைஞனின் கையில் இருந்த ஐஸ்கிரீமை வாங்கச் செல்கின்றான். சற்று தூரம் ஓடி அந்த இளைஞனின் கையிலிருந்த ஐஸ் கிரீமை வாங்கிய பின் தான் தெரிகிறது. தன் தாயை அவன் தொலைத்துவிட்டான்.



தாய் அவனைத் தேடுகின்றாள், ஆனால் சிறுவனோ, ஐஸ் கிரீம் கொடுத்த இளைஞனால் கடத்தப்படுகின்றான். கண நேரத்தில் தன் சொந்தத் தாயைவிட ஒரு அன்னியன் தருவதாகக் கூறிய ஐஸ்கிரீம் சிறந்ததாகத் தெரிந்த மாயையால் எடுத்த ஒரு தவறான முடிவு ஒரு பெரிய பிரச்சனையையே அந்த சிறுவனுக்கு ஏற்படுத்திவிட்டது. இது போன்று பல நிகழ்வுகளை நம் வாழ்வில் நாம் மேற்கோள் காட்டலாம்.

### சிலைவழிபாடு

இத்தகைய ஒரு நிகழ்வை பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கின்றோம். விடுதலைப்பயண நூலில் 32ம் அதிகாரத்தில் பொற்கன்றுக்குட்டி வழிபாடு நடக்கின்றது. இதனை முன்னிட்டு அந்த மக்கள் அனைவரையும் ஆண்டவர் அழித்தொழிக்க விழைகின்றார். காரணம், அவர்கள் ஆண்டவரை விட்டுவிட்டு பொற்கன்று குட்டியை வழிபட ஆரம்பிக்கின்றார்கள். இந்த பொற்கன்றுக்குட்டி தான் எகிப்திலிருந்து உங்களைக் காப்பாற்றிய கடவுள் என்று அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஒரு கருத்தை உருவாக்கி அதையே உண்மை என்று போதிக்கலானார்கள். எனவே கடவுள் அவர்கள் மேல் கோபம் கொள்கின்றார். இதற்குக் காரணம், கடவுளை விட தங்கள் சுயநல செயல்பாடுகள் அவர்களுக்கு பெரிதாகத் தோன்றியது தான். தங்கள் சுயநல செயல்பாடுகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களுக்கென்று ஒரு கடவுளையே உருவாக்குகின்றார்கள். இதை நாம் சிலைவழிபாடு என்கிறோம். எப்படி அந்த சிறுவன் தன் தாயின் கையை விட்டுவிட்டு திருடன் காட்டிய ஐஸ்கிரீமைத் தேடிச் சென்றானோ அது போல இஸ்ரயேல் மக்களும் தங்களை வழிநடத்திய கடவுளை விட்டுவிட்டு தீமையின் பின் சென்றார்கள்.

### முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

நம் வாழ்விலும் இதுபோன்று தீமையின் பின் சென்ற பல நிகழ்வுகள் இருக்கும். சற்று சிந்தித்துப் பார்த்தால். இத்தகைய தீமையான முடிவுகளால் தான் பல துன்பங்கள் நம்மை வந்து சேர்ந்திருக்கும். இன்று நாம் உயிர்ப்பின் காலத்தில் இருக்கின்றோம். உண்மையை உள்ளவாறு புரிந்து கொண்டு அதனை நம் வாழ்வில் கடைப்பிடித்து சரியான முடிவுகளை எடுக்க இறைவனின் அருள் வேண்டுவோம். மீண்டும் உங்களை அடுத்த இதழில் சந்திக்கும் வரை அன்பு வணக்கம் கூறி விடை பெறுகின்றோம். நன்றி


இறையாசீருடன்

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச

### தவக்கால தியானம் – குழந்தை இயேசு ஆலயம்

உவர்மலை - குழந்தை இயேசு ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி S. சுகுனேந்திரன் குரூஸ் அடிகளாரின் வழிகாட்டலிலும் புனித வின்சன் டீபோல் சபையின் ஆலோசனையிலும் பங்குமக்களுக்கான தவக்கால தியானம் அருட்பணி ரஜீவன் சேவியரால் 21.03.2021 அன்று காலை 10.00 - பி.ப 1.00 மணிவரை நடாத்தப்பட்டது. இத்தியானத்தில் ஊனியல்பின் செயல்பாடுகளும் அதிலிருந்து விடுதலை பெற உதவும் வழிகாட்டல் பற்றியும் தனது வாழ்க்கை அனுபவங்களோடும் விவிலிய வார்த்தைகளின் உதவியுடனும் தந்தையவர்கள் உரையாற்றினார்கள். மதிய போசன உபசாரத்துடன் இந்நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

புனித வின்சன் டீபோல் சபை - உவர்மலை



“ஆண்டவர் இயேசுவே ஏழைகளுக்கு உதவுவதற்கு நமக்கு எடுத்துக்காட்டாக உள்ளார்..”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவழிபாட்டின் அடையாளங்கள், குறியீடுகள்,உடல்நிலைகள் மற்றும் சைகைகள்




அருட்பணி. K. அலெக்சாண்டர்
இயக்குநர், தமிழக திருவழிபாட்டு மையம்,
TNBCLC, திண்டிவனம்

நம்பிக்கையாளரின் "செயல்முறை பங்கேற்பு" மிகவும் இன்றியமையாதது. உண்மையில் பங்கேற்பு அர்த்தமுள்ளதாக அமைய திருவழிபாட்டில் பயன்படுத்தப்படும் அடையாளங்கள், குறியீடுகள், உடல் நிலைகள் மற்றும் சைகைகளின் பொருள் உணர்ந்திருப்பது அவசியம்.

"மனிதர் ஒரு சமூக விலங்கு" என்ற அரிஸ்டாடிலின் கூற்றுப்படி சமூகத்தின் ஒரு அங்கமாகவே இருக்கிறார். பிறரோடு தொடர்புகொள்ள வழிமுறைகள் தேவைப்பட்ட போது, ஆதிமனிதர் விதவிதமான ஒலி எழுப்பியும், சைகைகளாலும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினர். ஒருவர் உணர்த்த விரும்புகிற காரியத்தை பிறரும் அதே அர்த்தத்தில் சரியாக புரிந்து கொள்ள பொதுவான அடையாளங்கள் பிறந்தன. இதுவே காலப்போக்கில் சைகைகளாக, சொற்களாக, மொழியாக, உடல் நிலைகளாக மெருகேற்றம் பெற்றன. அடிப்படையில் சைகை, சொற்கள், மொழி, உடல்நிலை அனைத்தும் அடையாளங்களே. அடையாளங்கள் அர்த்தம் பொதிந்தவை. இவை மற்றொன்றை விளக்குவதற்காகவும், உணர்த்துவதற்காகவும், சுட்டிக்காட்டவும் பயன்படுத்தப்படுகின்றன. அடையாளங்கள் பொதுவானவை அனைவராலும் புரிந்து கொள்ளப்படுபவை தாங்கள் குறித்து நிற்கும் பொருளையோ அர்த்தத்தையோ, தத்துவத்தையோ உணர்த்துபவை. எடுத்துக்காட்டாக:- கணித குறியீடுகள், வணக்கம் சொல்ல கை குவிப்பது, அன்பைச் சொல்ல இதயம் போல வரைவது, நெற்றியில் சாம்பல் பூசுவது...... மனித வாழ்வு முழுவதுமே அடையாளங்களால் ஆனது. சாதாரண மஞ்சள் பூசிய கயிறு திருமண உறவை குறித்துக் காட்டும் "மங்கலத் திருநாண்" ஆகிறதும். சாதாரண வண்ணத்துணிகள் ஆரஞ்சு, வெள்ளை, பச்சை என்று இணைந்து இருக்கிற போது இந்திய நாட்டின் கொடியாக மாறி நாட்டுப்பற்றை சுட்டிக் காட்டுவதையும் நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். இப்படி அடையாளங்களும், குறியீடு(ஒன்றின் மீது ஓர் குறிப்பிட்ட பொருளை ஏற்றிக் கூறுவது)களும் நிறைந்தது தான் நாம் வாழும் சமூகம் இவை நம் சமூக கலாச்சார, பண்பாட்டு மற்றும் சமய சூழலுக்கேற்ப அமைகின்றன.

குறிப்பாக சமய வாழ்வில் அடையாளங்கள் மிகவும் அவசியமானவையாயும், முக்கியமானவையாயும் அமைகின்றன. புலன்களுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை அனுபவங்களை உணர்வுகளை புலப்படும் விதத்தில் வெளிப்படுத்த இந்த அடையாளங்கள் உடல் நிலைகள் மற்றும் சைகைகள் பயன்படுகின்றன. எல்லா சமயங்களிலும் அடையாளங்கள் இருக்கின்றன. திருநீறு இடுதல், அர்ச்சனைகள், கோயில் வலம் வருதல், காவி உடுத்துதல், மொட்டை அடித்துக் கொள்ளுதல், நமாஸ் செய்ய முழந்தாளிடுதல், குல்லா பர்தா அணிதல் என எல்லாமே அடையாளங்கள் தான். அவை குறித்து நிற்கும் அர்த்தங்களும் தத்துவங்களும் மேன்மையானவை.




நம் திருவழிபாட்டில் ஏராளமான அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை சமய, சமூக, கலாச்சார, பண்பாட்டு, வரலாற்று மற்றும் விவிலிய பின்னணியில் வந்தவை. முனைவர் அருள்திரு எஸ். ஆரோக்கியராஜ் தனது நூலான "திருவழிபாடு ஓர் அறிமுகம்" என்பதில் சொல்வது போல பழைய ஏற்பாட்டில் பல அடையாளங்கள் இருந்தன. வானவில் (தொ.நூ 9:17) நுனித்தோல் நீக்கம் (தொ.நூ 17:10-14), இரத்தம் (வி.ப 24:8, லேவி 17:11) புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே ஒரு மாபெரும் அடையாளமாகத் திகழ்கிறார். இறைதந்தையின் அன்பு, இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றின் உறுதியான தெளிவான அடையாளமாகத் (Primordial Sacrament) திகழ்கிறார். அவர் செய்த புதுமைகள் அனைத்தும் இறையரசின் அடையாளங்களாக உள்ளன. இவ்வாறு கிறிஸ்து தம் தந்தையாம் இறைவனையும், அவர் வழங்கும் அருளையும் குறித்துக் காட்டும் முதன்மையான அருளடையாளமாகத் திகழ்கிறார். அவரது மீட்பளிக்கும் பணியை இவ்வுலகில் தொடர்கின்ற திருஅவை அடிப்படை அருட்சாதனமாக (Fundamental Sacrament) உள்ளது. இதன் வழியாக ஆற்றப்படும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் இறைவனுடைய அன்பு, இரக்கம், மன்னிப்பு, சமாதானம், அருள் ஆகியவற்றின் அடையாளங்களாக உள்ளன.

வாழ்வு சார்ந்த வழிபாடு – 7

> அடையாளங்கள், குறியீடுகள், உடல் நிலைகள் மற்றும் சைகைகளைக் குறித்த மறுகல்வி (Re- education) இன்றியமையாததாகிறது.

நம் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படும் அடையாளங்கள் குறித்து நிற்கிற மேன்மையான அர்த்தங்களை உணர்த்துவது அவசியம். ஆலயத்தில் உள்ள அனைத்துமே மேலான நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ளன. கோவிலை அணிசெய்தல் பகட்டுக்காக அன்றி அதன் மாண்புமிகு எளிமையை உணர்த்துவதாய் இருக்க வேண்டும். அழகு செய்வதற்காகப் பொருள்களைத் தெரிவு செய்யும் போது, அவற்றின் மெய்ம்மையும், நம்பகத் தன்மையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அவை மக்களுக்கு படிப்பினையாகவும், புனித இடத்தின் பெருமையை உணர்த்தும் வகையிலும் அமைந்திட வேண்டும். எனவே ஆலயத்தில் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தில் எதுவும் நோக்கமின்றியோ அல்லது அர்த்தமின்றியோ பயன்படுத்தப்படுவதில்லை திருவழிபாட்டின் அடையாளங்கள், குறியீடுகள், உடல் நிலைகள் மற்றும் சைகைகள் உணர்த்தும் மேலான அர்த்தங்களை உணர்ந்து பங்கேற்கிற போது நம்பிக்கையாளர் செயல்முறையில் பங்கேற்க முடிகிறது.

பொதுவாக நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் அடையாளங்களே திருவழிபாட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் பல வேளைகளில் அடையாளங்களின் முழுமையான அர்த்தம் உணராமலே நாம் இருக்கின்றோம். நம் சமூக, சமய, கலாச்சார, பண்பாட்டு, வரலாற்று வேர்களை நிராகரித்தாலும், கண்டு கொள்ளாமல் இருந்தாலும் வந்த விளைவு இது. இதைத்தான் திருத்தந்தை பிரான்சிஸ் தனது திருமடலான "அனைவரும் உடன்பிறந்தோர்."(Fratalli Tutti) என்ற சமீபத்திய மடலில் விளக்குகின்றார். வரலாற்று உணர்வின் முடிவு என்ற தலைப்பில் எண் 13,14ல் குறிப்பிடுகின்றார். மறுகட்டமைப்பு (Deconstructionism) என்கிற பெயரில் சமூக அமைப்பையும். மரபையும், கலாச்சார பண்பாட்டையும், வரலாற்றையும் நிராகரிக்கிற சூழ்நிலை நிலவுகிறது. இதனால் இன்றைய தலைமுறை மேம்போக்கான, ஆழமற்ற, வேரற்ற, பிடிப்பற்ற வெற்று மனிதர்களாய் மாறிக் கொண்டிருக்கிறார்கள். கலாச்சார, பாரம்பரிய, மரபின் மகத்துவத்தை அதன் மேன்மையான செழிப்பை கவனிக்கத் தவறுகிறார்கள். இதனால் தங்களது கலாச்சார மரபுகளை கைவிட்டு இலக்கில்லாமல் ஏதோ ஒன்றின் பின் அலைகிற நிலை வருகிறது. ஒரு கலாச்சாரத்தையோ வலுவிழக்கச் செய்ய வேண்டுமெனில் அவர்கள் பயன்படுத்தும் அடையாளங்களை அர்த்தமிழக்கச் செய்தாலோ அல்லது திரித்தப் பொருள் கொள்ளச் செய்தாலோ வரலாற்று உணர்வு இழந்து அடையாளங்கள் அர்த்தமிழக்கும்.



"பெரியவங்க வந்தா எழுந்து நிக்கணும்" இது மரியாதையைக் காட்டும் அடையாளம். இன்றைய தலைமுறை "ஏன் நிற்கணும்"? என்று மறுக்கிறது. மரியாதையின் அடையாளம் நலிகிறது. வணக்கம் என கைகுவிப்பது நலிகிறது. "வணக்கம்" என கைகுவிப்பது போய், "Hi" என கை உயர்த்துவதாகி வணக்கத்தின் அடையாளம் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. "மன்னிப்பு தமிழில் பிடிக்காத ஒரே வார்த்தை" "தீமை தான் வெல்லும்", "எவ்வளவு நாள் தான் நானும் நல்லவனாகவே நடிக்கிறது"..... போன்ற கூத்தாடிகளின் வசனங்களும், வன்முறை, போதை, பாலுணர்வு வக்கிரங்களை நியாயப்படுத்தும் திரைப்படங்களும் நம் ஒழுக்க மற்றும் அறநெறி அடையாளங்களை சீர்குலைக்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அடையாளங்கள், குறியீடுகள், உடல் நிலைகள் மற்றும் சைகைகளைக் குறித்த மறுகல்வி (Re- education) இன்றியமையாததாகிறது. நம் கலாச்சார, பண்பாட்டு, வரலாற்று வேர்களைத் தேடிச் சென்று நம் அடையாளங்களை மீட்டெடுப்போம்.

திருவழிபாட்டில் நாம் பயன்படுத்தும் அடையாளங்களை விரிவாக விளக்கமாக அடுத்த இதழில் காண்போம்...

"இறைநம்பிக்கை என்பது தரப்பட்ட ஒரு விடயமோ அல்லது ஒரு நபரின் கருத்தோ, எண்ணமோ அல்ல அது கேட்பதிலிருந்து வருகிறது ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஆடையின்மை (ORIGINAL NAKEDNESS) - 02

அருட்பணி. கிறிஸ்டிபோல்
இயக்குநர், பொதுநிலையினர் பணியகம்
கண்டி மறைமாவட்டம்



## ஏதேன் தோட்ட மனிதர்கள் - 06

வெட்கமே ஆடையின்றி இருந்த ஆணையோ அல்லது ஆடையின்றி இருந்த பெண்ணையோ ஒரு பொருளாகவோ அல்லது களிப்பூட்டும் சடப்பொருளாகவோ நோக்க தூண்டுகிறது. தொடக்கநூல் 2/25, உரைக்கின்ற "அவர்கள் வெட்கப்படவில்லை" என்கிற சொற்கள் ஆணோ அல்லது பெண்ணோ அங்கு ஒரு சடப்பொருளாக (Object) நோக்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன.

முதற்பாவம் முதல் ஆடையின்மை பற்றிய அனுபவத்தின் தார்பரியங்களை புரட்டிப்போட்டது. பாவத்தோடுதான் வெட்கம் உள்நுழைந்தது. முதற்பாவம் மனிதனை ஆரம்ப மனிதன், வரலாற்று மனிதன் என்று பிரிக்கின்றது. மனிதனின் வீழ்ச்சிக்குப் பின் ஆரம்ப மனிதனின் வாழ்க்கை மாறியது அவன் அதன்பின் வரலாற்று மனிதன் என்று அழைக்கப்பட்டான். ஆகவே வெட்கம் என்கிற உணர்வு இவ்விவிலிய மானுடவியல் மாற்றத்தின் விளிம்பில் அல்லது எல்லையில் இருக்கின்றது. (Boundary) ஆரம்ப மனிதன் அருள்நிலையில் முழுமை அடைந்த மனிதனாக இருந்தான். ஆனால் முதற்பாவத்தின் விளைவாக அருள்நிலையை இழந்து வரலாற்று மனிதன் பிறந்தான். இயேசு கிறிஸ்துவின் மீட்கும் செயலால் இழந்து போன அந்த உன்னத நிலைக்கு மீண்டும் உரிமைப்பேற்றை பெற வாய்ப்பு பெறுகிறான்.

திருத்தந்தை ஆரம்ப மனிதனின் முதல் ஆடையின்மையில் தனிமனித உறவுகளுக்கு இடையில் உண்மைத்தன்மை நிலவியது என கருதுகிறார். (Inter Personal Reality) வெட்கம் தனிமனித உறவுகளின் போதே உணரப்படுகின்றது. உதாரணமாக நாம் குளியலறையில் இருந்து வெளியே வரும்போது ஒரு விருந்தாளி வீட்டுக்குள் வந்தால் நாம் வெட்கப்படுகின்றோம். நாம் நமது நிர்வாணத்தையோ அல்லது அரை நிர்வாணத்தையோ மறைக்கும்படி எமது உள்உணர்வு எம்மை உந்தி தள்ளுகிறது. எமது தன்மானத்திற்கும் மாண்பிற்கும் பங்கம் ஏற்படாது இருக்கவே நாம் அப்படி செய்கின்றோம். அங்கே அச்சத்தோடு கூடிய வெட்கம் கலந்து இருப்பதாக திருத்தந்தை சுட்டிக்காட்ட முனைகிறார். ஏனென்றால் எமது ஆடையின்மையை காணும் அந்த புதியவர் முகம் சுளிப்பாரே அன்றி அதை ஏற்றுக்கொள்ளவோ உடன்படவோமாட்டார். ஆகவே முதல் ஆடையின்மை என்பது மிக துல்லியமான உடலின் மாண்பு மற்றும் உடலின் உட்பொருள் பற்றிய முழுமையான உள் உணர்வை வெளிப்படுத்தும் அனுபவமாகும்.

ஆகவேதான் ஒரு கணவன் தன் மனைவி முன்னோ அல்லது ஒரு மனைவி தன் கணவன் முன்னோ பயம் இன்றியும் கூச்சம் இன்றியும் நிற்க முடியும். காரணம் அங்கே அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரிடம் தாங்கள் ஏங்குகின்ற ஏற்றுக்கொள்ளுதலையும் உடன்பாட்டையும் பெறுகின்றனர். ஏற்று கொள்ளுதலும், உடன்பாடும் மனித மாண்புடன் மிக நெருங்கிய தொடர்புடைய அம்சங்களாகும். இந்த அனுபவத்தை திருத்தந்தை ஜோன் போல் ஆரம்ப தூய்மைநிலை அறிவு (Original Innocence of Knowledge) என்று அழைக்கிறார். இந்த அறிவானது நெருக்கமான உறவு (Intimacy) மற்றும் தனிமனித தொடர்பாடல் ஆகியவற்றுக்கு தேவையான அம்சமாக திகழ்கின்றது. உண்மையான மற்றும் தூய்மையான தொடர்பாடல் என்பது ஒரு ஆழமான உறவாகும். (Communion)

முதல் ஆடையின்மை என்கிற அனுபவம் உண்மையான நட்புறவையும் தன்னை கொடுத்தலில் (Self Giving) தூய்மையும் வெளிப்படுத்துகிறது. முதல் ஆடையின்மை ஊடாக ஒருவர் மற்றவரை புரிந்து கொள்ளவும் அறிந்துகொள்ளவும் இந்த தூய்மை உதவுகின்றது. ஏனெனில் முதல் ஆடையின்மை மனிதன் ஒரு சடப்பொருள் அல்ல மாறாக அவன் ஒரு மனித ஆள் என்கிற அறிவை உறுதிப்படுத்துகின்றது. ஆணும் பெண்ணும் இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட, அழிக்கப்பட முடியாத மனித மாண்பினை கொண்ட மனித ஆள்கள் எனப்படுகிறார். (Human Person) முதல் ஆடையின்மை என்கிற அனுபவம் மானுடத்தின் தூய்மை, மனித உடலின் புனிதம், மனித மாண்பு என்கிற இந்த உட்பொருட்களை குறிக்து காட்டுகிறது. முதல் ஆடையின்மையில் இந்த உட்பொருட்கள் பற்றி ஆராயும்போது முதல் பாவத்தால் விளைந்த இன்றைய துர்பாக்கிய நிலையை நாம் நினைக்கும்போது அதாவது தீய எண்ணம், பாலியல் குற்றங்கள் ஆகியன எம்மை துயரத்தில் ஆழ்த்துகிறது. கடவுள் எமது உடலை இவ்வாறு படைத்ததன் நோக்கம் நாம் இறைவனின் இரக்கத்தை இரைஞ்ச வேண்டும். இந்த இறைஇரக்கம் கிறிஸ்துவின் உடலில் எமக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்கிற பாஸ்கா மறைபொருள் எமக்கு அவ் அருளை மீண்டும் பெற்றுத்தருகின்றன.



"மனித இனத்தின் ஆழமான ஆசையே இன்னொரு மனிதனை அன்பாக நோக்குவதும், அதேவேளை அவரால் அன்பாக நோக்கப்படுவதும் ஆகும்" என்கிறார் புனித அகுஸ்தினார். இங்கே நாம் ஆராய்ந்து கொண்டிருப்பது ஊனக்கண்ணால் நாம் நோக்கும் வெற்றுடலை மட்டுமல்ல மாறாக, அனுபவத்தில் ஆதாமும் ஏவாளும் தங்களை வெளியரங்கமாக பார்த்துக் கொள்வதைவிட அககண்களினால் ஒருவரை நோக்கி கொண்டதால், அவர்களிடையே ஒரு முழுமையான தனிநபர் நெருக்கத்தை உருவாக்கிக்கொண்டனர்.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அகக்கண்ணால் பார்த்துக் கொள்வதால் அவர்களிடையே மிக நெருக்கமான மற்றும் முழுமையான பிணைப்பு நிலவுகிறது. இது முதல் பாவத்திற்கு முன் நிலவியது. ஆதிமனிதரின் பார்வையில் ஆன்மீக ரீதியிலும், உணர்வு ரீதியிலும் பிளவுகள் காணப்படவில்லை. ஆண், பெண் என்கிற இருபால் வேறுபாடுகள் ஆன்மீக ரீதியிலும், உணர்வு ரீதியிலும் ஒற்றுமையை தந்தன. புறநிர்வாணம் மனிதனின் அகநிர்வாணத்தை வெளிப்படுத்தியது. அதாவது உடலின் வெளி தோற்றத்தால் புலப்படும் நிர்வாணத்தின் முழுமையான புறநோக்கு, மனிதன் இறைவனின் சாயல் என்கிற உண்மையை தெளிவாக்கும் அககண்ணோட்டத்தின் நோக்குடன் தொடர்புடையதாய் இருக்கின்றது. அதாவது ஒரு நிர்வாண உடல் களிப்பூட்டும் காட்சி பொருள் அல்ல மாறாக அது இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட முழு மனிதன் என்பதை உணர தூண்டுகிறது.

முதல் ஆடையின்மையில் மனிதனின் உலகத்தின் மீதான பார்வை இறைவனின் பார்வையோடு ஒன்றிப்போவதாய் இருந்தது. ஏனெனில் ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவருடைய ஆடையின்மையை நோக்கும் போது அவர்கள் வெற்றுடம்பை நோக்கவில்லை. அவர் மற்றவரை நோக்கும் போது ஒரு மனித ஆள் தன் முன் நிற்பதாகவே நோக்கினார். அதாவது ஒரு பொருளை அல்ல முழு மனிதனையே நோக்கினார். ஆதாமும் ஏவாளும் மற்றவரின் உடலை பார்த்து கொள்வதிலும், அறிந்து கொள்வதிலும் அவர் வெட்கபடவில்லை.

இந்த கருத்துகளை முன் வைத்த திருத்தந்தை ஜோன் போல் கூறுவது யாதெனில் மனித உடலின் வெளியரங்கமான பார்வையைவிட அது அகக்கண்ணால் நோக்கப்படும் கோணம் ஒரு ஆழமான புதிய அர்த்தத்தை கொண்டிருக்கிறது என்று எடுத்தியம்புகிறார். அதேபோல் மனித உடலானது வெளி தோற்றத்தில் மனித ஆள்தன்மை என்கிற உள்ளார்ந்த உண்மையை வெளிப்படுத்துகின்றது என்றும் கூறுகின்றார்.

ஆகவே முதல் ஆடையின்மை என்கிற அனுபவம் ஒரு மனிதனின் நிர்வாணத்தின் மீதான பார்வை வெறும் வெளித்தோற்றத்தை அல்ல, மாறாக நோக்கப்படும் இறைவனின் ஒரு படைப்பு, என்றும் அவர் இறைவனின் சாயல் என்றும் நோக்க அழைப்பு விடுக்கின்றது. அதேவேளை மனித உடலின் வேறுபாடுகள் அதன் அமைப்பு ஆகியன தன் கொடுத்தலுக்காகவும் பெற்றுக் கொள்வதற்காகவும் (Selfgiving and Receiving) படைக்கப் - பட்டிருக்கின்றது என்பதையும் முதல் ஆடையின்மை வெளிப்படுத்துகிறது.

இன்று அலங்கோலமாகவும், அரைநிர்வாணமாகவும் ஆடை அணிதல், ஆபாச திரைப்படம் பார்த்தல், மனித உடலை வியாபார பொருளாக்கி பணம் சம்பாதிதல், தங்கள் நிர்வாணத்தை வெளிப்படுத்தி தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்ளல் போன்ற சமுதாய சீர்கேடுகள் முதல் ஆடையின்மை என்கிற திருத்தந்தை ஜோன் போல் உடைய கருத்துக்களுக்கு முரணானவை என்பதை நாம் உறுதிப்படுத்தி கொள்கின்றோம். ஏனென்றால் அவை அனைத்தும் மனித மாண்புக்கு எதிரான செயல்கள் ஆகும்.

தொடரும்

"அழிந்து கொண்டிருக்கும் உலகைக் காப்பாற்ற உம்முடைய தினசரி பழக்க வழக்கங்களை துணிந்து மாற்றிக்கொள்வது அவசியம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான தொடர் - 01

# இளமை பற்றிய பரவலான எண்ணங்கள்

அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

உன்னைப் பார்க்க நான் துடிக்கின்றேன்
உடன் பேச நான் விளைகின்றேன்
வந்து சந்திப்பாயா இறைவா!
இது இன்றைய இளையோரின் ஏக்கம்



திருத்தந்தை பிரான்சிஸ் ஆசியாவிலே அதிகமாகக் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வாழும் பிலிப்பைன்ஸ் நாட்டிற்குச் சென்றிருந்த வேளை அங்குள்ள இளையோரைச் சந்தித்தார். அவ்வேளை "சில்பெல்" என்ற பதின்மூன்று வயதுச்சிறுமி அவரை நோக்கி "திருத்தந்தை அவர்களே நான் ஒரு தெருவோரச் சிறுமி என்னுடைய இந்த வயதில் பணத்திற்காக என் உடலை அன்றாடம் விற்கின்றேன். இன்னும் பலர் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளனர். எங்களுக்கு ஏன் கடவுள் இந்தத் துன்பங்களை அனுமதிக்கின்றார்?" என்று கேட்டாள் அவளின் கண்ணீர்க்கதையை செவிமடுத்த திருத்தந்தை "நான் உனது கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் கூறமுடியாது ஆனால் உன் கண்ணிலிருந்து வழியும் பரிகாரக் கண்ணீரால் உன்னை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது" என்றாராம். ஆம் இன்றைய சூழ்நிலையில் இளையோருக்கு வழிகாட்டுதல் என்பது ஒரு சவால் அவர்களுக்கு ஓர் சரியான வழிகாட்டியாக வாழ்தல் என்பதும் எடுத்துக்காட்டாக வாழ்வது என்பதும் மற்றுமொரு சவால். இந்தச் சவால்களுக்குச் சரியான பதில் இயேசுதான் அவர் ஒரு சாதனை இளைஞர் 33 வயதில் சாதனை படைத்தவர். தனக்கெனத் தனி வழி படைத்துத் தன் வாழ்வைப் பிறருக்காகக் கொடுத்தார். இதனால் இன்றைய இளையோருக்கு ஈடுஇணையற்ற சகல கலா வல்லவனாக, மாதிரியாக எல்லோரும் பின்பற்றக் கூடிய ஒருவராகத் திகழ்கிறார்.

இயேசுவிடம் இருந்து இன்றைய இளையோர் நிறையப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள், ஏற்படும் சவால்கள், சந்தேகங்கள், உணர்த்தும் உண்மைகள் ஆகியவற்றின் நடுவே உண்மை இறைவனைத் தேட வேண்டும். இளையோருக்கு (To youth), இளையோருடன் (With youth), இளையோரால் (By youth), இளையோருக்காக (For youth) என்பதை அடிப்படையாகக் கொண்டு இளையோர் முழுமையாக இறையனுபவத்திற்குள்ளாகி சமுதாய மாற்றத்தின் காரணியாக சிறப்பாக இன்றைய காலகட்டத்தில் திகழ வேண்டும். இந்த இளம் தலைமுறைக்கு என்ன ஆகப்போகின்றதோ என்ற கவலை ஒருவேளை உங்களுக்கு இருந்தால், தெரிந்து கொள்ளுங்கள் இந்தத் தலைமுறை வளர்ந்து தனது இளம் தலைமுறை என்னவாகப்போகின்றதோ என்று கவலைப்படத் தொடங்கும்.

இன்று இளமையைக் குறித்து எழுப்பும் வினாக்களும் பகிரும் எண்ணங்களும் இன்றைய இளம் தலைமுறை என்றுமே இளமையாக இருந்தது போலவும் என்றுமே இளமையாகவே இருக்கப் போவது போலவும் தோன்றச் செய்கின்றது. இளமை என்பது மனித வாழ்க்கையில் ஒரு பரிமாணம் என்றாலும் மனிதத்தை முழுமையாக எண்ணும் வகையில் நிச்சயமான, நிலையான என்றுமே இருக்கக் கூடிய பரிமாணம் என்றாலும் தனிமனித வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் அது மாறுகின்ற நிலையில்லாத கடந்து செல்கின்ற பரிமாணம் என்பதே உண்மை. ஒரே நேரத்தில் இளமை நிலையற்றதாகவும், நிலையானதாகவும் காட்சி தருவதை நம்மால் உணராமல் இருக்க முடியாது. மொத்தமாய் பார்த்தால் இரண்டிலுமே ஒரு எதார்த்தமின்மையும் நம் அறிவுக்கு எளிதாய் எட்டிவிடுகின்றது.

இளமைப்பருவம் என்றால் 15 முதல் 24 வயது வரம்பை குறித்துக் காட்டுகின்றன. ஐக்கியநாடுகளின் தரவுகள் 1985ம் ஆண்டு அகில உலக இளைஞர் ஆண்டில் இந்த வரையறை வகுக்கப்பட்டது. எனவே ஐக்கியநாடுகள் சபையால் இளைஞரைக்குறித்து தரப்படும் எல்லாப் புள்ளி விபரங்களும் இந்த வரையறைக்குட்பட்டே தரப்படுகிறது. எமது வரையறைப்படி இளமைப்பருவம் என்பது 13 முதல் 35 வரையுள்ள காலம் என்றும் 19 வயது வரை ஒரு பிரிவாகவும் அதற்கு மேல் ஒரு பிரிவாகவும் பிரிக்கின்றோம். இவை அரசியல் சார் வரையறைகள் என்றால் கலாச்சாரப்படியும் இளைஞர்கள் யார் என்பதை நமது சமுதாயம் இனம் காணுகின்றது. இயல்பாக திருமணம் ஆகும் வரை அவர்கள் இளைஞர்கள் என்றும் திருமணத்தோடு அவர்கள் நிலை மாறுகின்றது என்றும் எழுதப்படாத ஒரு வரையறை நமது சமூகத்தில் பரவலாக காணப்படுகின்றது.

இவை அனைத்தையும் நாம் காணும் போது இளைஞர்கள் அவர்களின் வயதைப் பொறுத்தும் வயதிற்கேற்ப நிலைமாற்றங்களைப் பொறுத்தும் அறியப்படுகின்றார்கள் என்பதே உண்மை "ஏழு கழுதை வயசாகுது இன்னும் தறுதலையா சுத்துறவடிவைப்பாரு" உங்கட வயசுக்கேற்ப நடந்துக்க நீங்க என்ன இன்னும் இளைஞர் என்ற நினைப்பா? என்ற கருத்தாடல்கள் நம் சமூகத்தில் வெகு இயல்பானவை அல்லவா? இளமை என்பதற்கு வயது வரம்புகளற்ற புரிதல் என்பது சாத்தியமல்ல எனினும் வயது வரம்பு ஒன்றே இளமையை விளக்கி விடாது என்பதே நாம் சிந்திக்க வேண்டிய கூற்று இக்கூற்றை நாம் இங்கு சிந்திக்க வேண்டியதன் தேவை வயதை மட்டுமே வரையறையாகக் கண்டு இளைஞர் என்று நாம் ஏற்றுக் கொள்கின்ற தரப்பைக் கொண்டு இளைஞரின் இயல்பையும் பரிமாணங்களையும் நாம் நிர்ணயித்து பழகிவிட்டோம். வயது வரம்புகளைக் கொண்டு அதற்குள் அடங்குபவர்களின் இயல்பை இளமையின் இயல்பு என்று கூறுவதை விட இளமையின் இயல்புகளைப் பட்டியலிட்டு அதன்படி அமைகின்ற நபர்களை அடையாளம் காண விழைந்தோம் எனில் நாம் வியந்து ஏற்க வேண்டிய உண்மைகள் பலவிருக்கும் அதில் முதன்மையான உண்மை இளமை வயது குறித்த உண்மையல்ல அது மனது குறித்ததாகும்.

நடக்கின்ற அனைத்தையும் புதுமையாய் அணுகும் குணமும் அளவுகடந்த ஆற்றலும் மனதில் நிரம்பி வழியும் துணிச்சலும் விஞ்சி நிற்கும் படியாய் வாழும் வாழ்க்கை புதிதாய் கற்றுக்கொள்ள எப்போதும் தயாராய் உள்ள மனநிலை இவற்றைக் கொண்டவர்கள் எத்தனை வயதானாலும் இளமை மாறாத பொலிவோடு காணப்படுகின்றமைதானே யதார்த்தம். ஏதோ ஒரு மூலையில் முடங்கிப்போன வாழ்க்கை, காண்பதெல்லாம் கசப்பு, கற்றுக்கொள்ளவோ, உற்றுநோக்கவோ புதிதாய் எதையும் காணாத மனது. இவர்கள் முதுமை அடைய எத்தனை நூற்றாண்டுகள் இருப்பினும் இளமையின் இலக்கணத்திற்கு ஒவ்வாதவர்களே இளமைகுறித்த நம் சிந்தைகைளில் நாம் முதலில் தெளிவுறவேண்டிய கூற்று, இளமை வயது குறித்த உண்மையல்ல மனது குறித்த உண்மையாகும்.

இன்றைய இளையோரில் பலர் தங்களுக்குள் இருக்கும் ஆற்றலை உணராமல் இருப்பதும் அப்படியே உணர்ந்தாலும் அதைத் திட்டமிட்டு வளர்க்காமல் இருப்பதும், அப்படியே வளர்ந்தாலும் அதனைச் சரியான வாய்ப்புத்தேடி பயன்படுத்தாமல் இருப்பதும் பெருந்தடை. "King of Kings" என்ற ஆங்கிலப் படத்தில் ஒருகாட்சி நடக்க இயலாத ஒருவனை இயேசு நடக்கச் சொல்கின்றார். அவன் தயங்குகின்றான், எழுந்து நிற்கத் தடுமாறுகின்றான், நடக்கத் துணிவில்லை என்னால் எழுந்து நடக்க முடியுமா? என்ற அவநம்பிக்கை இதைப்பார்க்கின்றார் இயேசு அவர் அவனுக்குச் சொன்ன வார்த்தை "தம்பி, உன்னுடைய நம்பிக்கை உன் கால்களை விட பலவீனமாக இருக்கின்றது. எனவே உன்னை நீ நம்பு உன்னால் எழுந்து நடக்க முடியும்."



இவ்வார்த்தை அவனது உள்ளத்தை ஈட்டியால் குத்தியது போன்ற உணர்வு. அவ்வளவு தான் அவன் துணிந்து எழுந்து நடக்க ஆரம்பித்தான் என்னால் நிற்க முடிகின்றதே என்ற உணர்வு அவனுக்கு நடக்கத் துணிவு தந்தது. முதலில் சற்றுத் தடுமாறினாலும் பின்னர் சீராக நடக்க ஆரம்பிக்கின்றான். இயேசுவின் செயற்படத்தூண்டுகின்ற வார்த்தை அவனை ஊக்குவித்ததுதான் அவனை நடக்க வைத்தது. சிலரைக் கொள்கைகள் ஊக்குவிக்கும், சிலரை செயல்கள் ஊக்குவிக்கும், சிலரை ஆற்றல் நிறைந்த வார்த்தைகள் ஊக்குவிக்கம். இளையோருக்கான இத்தொடர் மூலம் அளிக்கப்படும் வார்த்தைகள் எம் இளையோரை ஊக்குவிக்கும் என எண்ணுகிறேன்.....

தொடரும்

"ஏழையான மற்றும் ஏழைகளுக்கான திரு அவையையே விரும்புகின்றேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி....

# அன்பியங்கள் காலத்தின் தேவையா?

ii. மேய்ப்புப்பணி அணுகுமுறையாக இருக்க வேண்டும் :
**(Pasotal Approach)**

இம்முறையில், திருஅவையின் தலைமை ஆயரோடு இணைந்து ஆயர்கள், குருக்கள் இயேசுவின் மனநிலையோடு எவ்வகை சூழல்களுக்கும் முகம் கொடுப்பதும், நல்லாயன் இயேசுவின் மனநிலை அன்பியத்தில் இயங்கும் ஒவ்வொரு தனி நபரின் மனநிலையுமாக அமைவதோடு, நல்ல மேய்ப்பனின் வழிகாட்டும் பணியிலும் வளர வேண்டும். இதுவே மேய்ப்புப்பணி அணுகுமுறை.

அடிப்படையில் உயிர்த்த இயேசுவின் ஏக்கம் "நீ என்னை அன்பு செய்கிறாயா?" (யோவான் 21:15). எனவே எம் அன்பிய சமூகங்களில் அனைவரும் இயேசுவின் அன்பைப் பகிரக் கூடியவர்களாய் மாற வேண்டும். துன்பத்தில், பிரச்சனைகளில், வறுமையில், நோய்களில், வாழ்வோரை இயேசுவின் மனநிலையோடு அணுக வேண்டும். ஆறுதலும், நம்பிக்கையும் கொடுக்கிறவர்களாய் சிறு கிறீஸ்தவ குழும உறுப்பினர்கள் மாறவேண்டும். இறுதியில் நம் பங்குச் சமூகம், மறைமாவட்டம், உலகத் திருஅவை உயிரோட்டமுள்ளதாய் உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வுக்கு சான்று பகரும் சமூகமாய் இயேசுவின் மனநிலையோடு கூடிய ஆதித் திருஅவை மக்களின் வாழ்க்கை முறையில் வளர்வதற்கு ஒரே வழி சிறு கிறீஸ்தவ குழுமங்கள்தான். பல நாடுகளிலும் சிறு கிறீஸ்தவ குழுமங்கள் இருந்தாலும் ஒவ்வொரு குட்டித் திருஅவையும் "ஒருங்கிணைந்த, மேய்ப்புப்பணி" (Intergral approach) அணுகுமுறையை சரிவர திட்டமிட்டு, அர்ப்பணித்து ஆர்வத்துடன் செய்யும்போதுதான், அன்பியங்கள் ஆதித் திருஅவையில் தோன்றிய உண்மையான பண்பில் தன்மையில் வளரவும், மாறவும் முடியும்.

### அன்பியங்களின் அடிப்படை... இறைவார்த்தை!

**II.** (அ) இறைவன் படைத்த சமத்துவமான உலகம், ஏற்றதாழ்வுகளால் நிறைந்து கொண்டிருப்பது மனித சமுதாயத்திற்கே ஓர் பெரிய ஆபத்து. இதை இன்னும் எளிமையாய் சொல்லப்போனால்,

வறுமையும் - வளமையும்

வறட்சியும் - செழுமையும்

செல்வமும் - ஏழ்மையும்




அருகிலேயே அமர்ந்துகொண்டு, "கண்ணிருந்தும் காணாமல், காதிருந்தும் கேளாமல்" (மாற்கு 8:18) விறைத்துப்போன மனச்சான்று எனும் பாதாளத்திற்குள் மனித சமுதாயம் வீழ்ந்து கொண்டிருக்கிறது. கீழே சிந்தும் உணவைச் சாப்பிடுவதற்கு ஏழையாய் இருந்த லாசரும், அதைக் கண்டுகொள்ளாமல் இருந்த செல்வந்தனின் உவமையில் அயலானை கண்டுகொள்ளாதவனுக்கு ஆண்டவரின் எச்சரிக்கை தெளிவாய் உள்ளது (லூக் 16:19-ff). "என் அயலான் யார்?" (லூக் 10,29) என்று கூடத் தெரியாத திருச்சட்ட அறிஞரைப் போல, அறிவியல் தொழிநுட்ப, விஞ்ஞான உலகில் கரை கண்ட மனிதனுக்கு "அயலான்" கண்ணுக்குத் தெரியாமல் போய்விட்டது வேதனையிலும் வேதனை தான். இவ்வகை உலக சமுதாயத்திற்குள் சமத்துவமும், நீதியும், "அயலான் உணர்வு" கொண்ட சமூகத்தை மலரச்செய்வது உலகத் திருஅவையின், ஏன் திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொரு கிறீஸ்தவ மகனின், மகளின் கடமையும், பொறுப்புமாகும். இதனை வலியுறுத்த தான் ("Fratelli Tutti") "அனைவரும் சகோதர சகோதரிகள்" எனும் அர்த்தமுள்ள, காலத்தின் தேவை அறிந்து ஓர் சுற்றுமடலை திருத்தந்தை பிரான்சிஸ், புனித பிரான்சிஸ் அசீசியாரின் திருநாளன்று (04.10.2020) வெளியிட்டுள்ளார். இச்சுற்றுமடலின் இரண்டாவது அத்தியாயம், "தெருவோர அன்னியன்" ("A Stanger on the Road") பகுதியில் 63ம் இலக்கத்தில், வீதியில் அறிமுகமாகும் அன்னியர்களை, என் அயலானாய்க் கண்டு காயங்களைக் கட்டவும், கைகொடுத்துத் தூக்கவும் அழைப்பு விடுக்கின்றார்.

### ஆ) அன்பியத்தின் ஆன்மீகம்

இன்று சிறு கிறீஸ்தவ குழுமம் அல்லது அன்பியம் என்பது ஆசியத்திருஅவையின் ஓர் புதிய ஆன்மீகக் கண்டுபிடிப்பு அல்ல, மாறாக "மீண்டும் வேர்களுக்குச் சென்று" (AD FONTES) இறைவார்த்தையின் ஒளியில் கிறீஸ்தவ வாழ்வின் அழைத்தலையும், அதன் இலக்கினையும் உணர்ந்து, உயிர்த்த கிறீஸ்துவைச் சந்தித்து, உயிரோட்டமுள்ள சாட்சிய வாழ்வுக்கு தங்களை அர்ப்பணித்த சீடர்களைப்போல, நாமும் இயேசுவின் அன்புப் போதனைகளுக்கு சாட்சிய உருக்கொடுப்பதும், "அன்பு வாழ்வை"



எம்மில் மீள் ஒளியேற்றுவதுமே (Rekindle) அன்பியமும், அன்பியத்தின் அடிப்படையுமாகும். எனவே அன்பியங்கள், அடிப்படையில் இறைவார்த்தையை இதயமாகவும், வார்த்தை கற்பிக்கும் அன்பு வாழ்வை உயிர் மூச்சாகவும் கொண்டு இயங்க வேண்டும்.உருவாக்கப்படல்வேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பிற்கு பின்பு திருத்தூதர்களின் வாழ்வு இரண்டு வகையாக காட்டப்படுகின்றது. முதல் வகை: "பூட்டப்பட்ட கதவுகளுக்குள்ளும்," (யோவான் 20,19) "மாடி அறைக்குள்ளும்" (தி.ப 1,13) இரண்டாம் வகை: தூய ஆவியைப் பெற்ற சாட்சிய வாழ்வு (தி.ப 2,1-ff). அன்பியங்கள் அல்லது சிறு கிறீஸ்தவ குழுமங்கள் இவ் இரண்டு வகையையும் உள்ளடக்க வேண்டும். முதல் வகை "ஒரே மனதோடு இறைவேண்டலில்" ஈடுபட்டிருந்தார்கள். அந்த ஆழமான ஒருமனப்பட்ட செப அனுபவம் (இதனை அன்பிய படிமுறை 1 - 4 வரை காணலாம்) அவர்கள் வார்த்தையை பறைசாற்றவும், (இதனை அன்பிய படிமுறை 5ல் காணலாம்) ஒன்றுபட்ட சாட்சிய வாழ்வு வாழவும் (அன்பிய படிமுறை 6 - 7 வரை காணலாம்) அல்லது விசுவாச வாழ்வுக்கு செயல் வடிவம் கொடுக்கவும் அழைக்கின்றது.

எனவே அடிப்படையில் சிறு கிறீஸ்தவ குழும வாழ்வு திருத்தூதர் பணிகள் நூலில் காட்டப்படும் முதல் அன்பிய திருஅவையின் பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். அங்கே

- இறைவார்த்தை மையமாக இருந்தது. (தி.ப 2:42)
- நட்புறவு இருந்தது. (தி.ப 2:42)
- திருவருட்சாதன வாழ்வு இருந்தது (அப்பம் பிடுதல்). (தி.ப 2:42)
- செபவாழ்வு இருந்தது. (தி.ப 2:42)
- ஒற்றுமை நிலவியது (தி.ப 2:44)
- பகிர்வு இருந்தது. (தி.ப 2:45-46)

ஆகவே சிறு கிறீஸ்தவ குழும வாழ்வு, இறைவார்த்தை கற்பிக்கும், முதல் அன்பிய திருஅவை கற்றுத்தரும் தன்மைகளை, பண்புகளை தன்னகத்தே கொண்டு உருவாக, உருவாக்கப்பட வேண்டும். இது ஒரு பக்திச்சபையோ அல்லது ஓர் செப குழுவோ அல்ல, மாறாக அன்பை இயல்பாகக் கொண்ட சாட்சிய வாழ்க்கை முறை, இதுதான் அன்பியத்தின் அடிப்படை.

**அன்பியங்களின் வளர்ச்சி இறையரசின் மலர்ச்சி,**

**அன்பியங்களின் வளர்ச்சி திரு அவையின் மறுமலர்ச்சி.**

SMALL CHRISTIAN COMMUNITIES

அருட்பணி. டாக்டர். போல் றொபின்சன்,
இயக்குனர், அன்பியப் பணியகம்,
திருகோணமலை மறைமாவட்டம்

**"கடவுள் நம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அவர் முன்னிலையில் புதுவாழ்வு வாழ அழைத்துள்ளார்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவினைத் தேடியே

கவிதை வரிகளை சரியாக வடிவமைக்கும்


போட்டி முடிவுகள் இதோ

**Fr. N.C அருள்வரதன்**

கலந்து கொண்டவர்கள் - 13

பாராட்டுக்குரியவர்கள் - 05

சரியாக வடிவமைத்தவர்கள் - 02 (குலுக்கல் முறையில்)



பரிசுக்குரியவர்
செல்வி சு. கௌசல்யா
இல.216/12 சுடரொளி ஒழுங்கை
பாலையூற்று

## இதோ கவிதையின் சரியான வடிவம்

- உலகெலாம் பரவிவிட்ட கொரோனா
- உலகையே வருத்தத்திலாழ்த்தியே
- நோய்களென்றும் மரணங்களென்றும்
- எண்ணிக்கைகள் ஏறிக்கொண்டே
- உயர்ந்து கொண்டு செல்வதனால்
- வேதனையின் வடிவங்களே விளைவுகளாகிறதே
- உலகைப் பற்றிக் கொண்டுள்ள
- கொடுமையாம் கொரோனா வியாதி
- உலகினை விட்டு அது
- மறைந்தழிந்து போக வேண்டும்
- இறைவன் துணையாலன்றி
- இது மறைந்து போய்விடாது
- வேண்டுவோம் இறைவனை ஒன்றாகியே
- இறைவன் நமக்குத் துணையாகவே
- நம் துயர நிலைகள் மறையும் உண்மையே




## ஹாய் குட்டீஸ்

**திருவிவிலிய புதிர்போட்டி எண் – 43**

**யோபு அதிகாரம் 1 – 10**

போட்டி முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1. | யோபு | (6:30) |
| 2. | யோபு | (3:1) |
| 3. | தேமா | (2:11) |
| 4. | வஞ்சகரின் | (5:13) |
| 5. | ஆழியின் முதுகை | (9:8) |
| 6. | தளர்ந்த கைகளை | (4:13) |
| 7. | கல்தேயர் | (1:17) |
| 8. | இறைபற்றில்லாரின் | (8:13) |
| 9. | அரிமா | (10:16) |
| 10. | எரிச்சல் | (5:2) |
| 11. | யோபு | (3:26) |
| 12. | ஆற்றலில் வல்லவராய் | (9:4) |
| 13. | புழுவும் புழுதிப்படலம் | (7:15) |
| 14. | 7பகலும் 7இரவும் | (2:13) |
| 15. | புயல் காற்றைப் போல் | (8:1-2) |



பங்குபற்றியவர்கள் - 38 குட்டீஸ்

மிகச்சரியாக விடையளித்தோர் 10 குட்டீஸ்

பரிசுக்குரியவர்கள்



1ம் இடம்
வை. யுசிக்கா
டிமெல்லோ இல்லம்
மூதூர்

2ம் இடம்
இ. சுகிர்தா
இல. 18/4,
வேளாங்கண்ணி வீதி
பாலையூற்று

3ம் இடம்
ரெக்சன் லியோனா குரூஸ்
சகாயபுரம்
மூதூர் - 02

## இறைவார்த்தைப் புதையல் போட்டி

**புனித மாற்கு நற்செய்தி**

**அதிகாரம் 1 – 8 வரை**

**போட்டி முடிவுகள்**

பங்குபற்றியவர்கள் - 42 பேர்

மிகச்சரியாக விடையளித்தோர் - 22 பேர்



பரிசுக்குரியவர்கள்

1ம் இடம்
றி. சர்மிளா
இல. 529/31 ஏகாம்பர வீதி
திருகோணமலை

2ம் இடம்
நெ. டனிற் வுரோன்
இல. 564, கதிர்காமத்தம்பி வீதி
செல்வநாயகபுரம்




3ம் இடம்
ஜி. எம். டிக்னேசியா
இல. 24, இமாம் வீதி
சீனன்குடா

பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்கும் நன்றியும் வாழ்த்துக்களும்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல், கண்டுபிடித்தல் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் 16 சிறார்கள்

**பரிசுக்குரியவர்கள்**



1ம் இடம்
ஓசேனா ஏஞ்சலின் டி சௌசா
இல. 508, அன்புவழிபுரம்
திருகோணமலை

2ம் இடம்
வி. நிரிஜிகா
இல. 25/4, வேளாங்கண்ணி வீதி
பள்ளத்தோட்டம்
திருகோணமலை

3ம் இடம்
றுபீனா பெடொலிக்கஸ் ஒக்கஸ்
இல. 32/9, 3ம் வட்டாரம்
சாம்பல்தீவு

பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கும் நன்றியும் வாழ்த்துக்களும்

"நம்மிடம் உள்ள நற்பண்புகள், கொடைகள், திறமைகள், தனிவரங்கள் அனைத்தும் பிறரோடு பகிர்ந்து கொள்ளவே நமக்கு வழங்கப்பட்டுள்ளது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய போட்டி - 01
## புனித மாற்கு நற்செய்தி (அதிகாரம் 1 - 2 வரை)

- கீழ் வரும் இறைவார்த்தையின் அதிகாரம், வசனத்தை மட்டும் எழுதுக.
- எல்லோரும் பங்குபற்றலாம்
- திருமலை தீப பத்திரிகையில் வரும் படிவத்தை நிரப்பி அனுப்பவும்.
- போட்டோ கொப்பி பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- சரியான விடை அனுப்புவோர் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

**கேள்வி - பதில்**

01. நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்று முழந்தாள் படியிட்டு இயேசுவிடம் வேண்டியவர் யார்?
விடை: ..............................................................................

02. ஓய்வு நாள் யாருக்கு கட்டுப்பட்டதே என்று இயேசு பரிசேயருக்கு கூறினார்?
விடை: ..............................................................................

03. திருமுழுக்கு யோவான் பாலைநிலத்துக்கு வந்து பாவமன்னிப்பு அடைய மனம் மாறி எதைப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார்?
விடை: ..............................................................................

04. இயேசு பாலைநிலத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டார். அங்கு அவருக்குப் பணிவிடை செய்தவர் யார்?
விடை: ..............................................................................

05. கடவுள் ஒருவரே அன்றிப் பாவங்களை மன்னிக்க யாரால் இயலும் என உள்ளத்தில் எண்ணிக்கொண்டிருந்தவர்கள் யார்?
விடை: ..............................................................................

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

06. எவரும் .................................... ஆடையில் .................................... ஒட்டுப்போடுவதில்லை அவ்வாறு ஒட்டுப் போட்டால், அந்தப் புதிய துணி பழையதிலிருந்து கிழியும் .................................... பெரிதாகும்.

07. யோவானுடைய .................................... பரிசேயருடைய .................................... நோன்பிருக்க உம்முடைய .................................... ஏன் நோன்பிருப்பதில்லை என்று கேட்டனர்.

08. பாலைநிலத்தில் குரல் ஒன்று .................................... ஆண்டவருக்காக .................................... ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் ....................................

09. இயேசு விடியற்காலைக் .................................... எழுந்து .................................... ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் .................................... வேண்டிக்கொண்டிருந்தார்.

10. அனைவரும் ....................................இதைப் போல நாம் ஒரு போதும் .................................... என்று கூறிக் கடவுளைப் .................................... புகழ்ந்தனர்.

**சரி, பிழை எழுதுக.**

11. தொழுநோயாளரிடம் மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார். ( )

12. என்னைப் பின்பற்றி வா என்று இயேசு லேவியிடம் கூறினார். ( )

13. வாயை மூடு இவரை விட்டு வெளியே போ என்று இயேசு தீய ஆவி பிடித்தவரை அதட்டினார். ( )

14. இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். ( )

15. யோவான் கைது செய்யப்பட்ட பின் கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு நசரேத்துக்கு வந்தார். ( )

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

பங்கு : ..............................................................................

முடிவுத் திகதி : 18.05.2021

# எண் பழமொழியும், விவிலிய எண்களும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1000, 1/2 | 1 | 1, 1 | 8, 16 | 5, 5000 | 30 | 8 |
| 1, 2 | 10 | 1000 | 5 | 100 | 5, 2 | 9 | 7 |
| 6, 100 | 100, 1000 | 10 1/2 | 50 | 4, 2 | 6 | 5000 | 4 |
| 7, 70 | 30, 60, 100 | 40 | 150 | 12 | 72 | 5, 50 | 100 |

- இங்கு உள்ள ஒவ்வொரு கட்டத்தில் இருக்கும் எண்கள் பழமொழியையும், விவிலியத்தில் வரும் நிகழ்வின் எண்களையும் குறிக்கும்.
- உதாரணமாக : 16 என்ற எண்ணை எடுத்துக் கொள்வோம், இந்த எண்ணுக்குரிய பழமொழி 16ம் பெற்று பெருவாழ்வு வாழ்க. இது போல் இங்குள்ள மற்ற எண்களுக்குரிய பழமொழிகளையும், விவிலிய நிகழ்வு எண் வசனங்களையும் கண்டு பிடியுங்கள்.
- குறைந்தது 20வதை கண்டு பிடித்து எழுதவும். எல்லாரும் பங்கு பற்றலாம்.
- Full ஸ்காப் பேப்பரில் எழுதவும். பெயர், முகவரி, பங்கு எழுதி அனுப்பவும்
- சரியாக எழுதுபவர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

பரிசுகள் முறையே

**1ம்பரிசு 500ரூபா, 2ம்பரிசு 300ரூபா, 3ம்பரிசு 200ரூபா**

முடிவுத் திகதி: 18.05.2021

"குழந்தைகளின் நல்ல பழக்கங்களுக்கும், நன்மைத்தனத்துக்கும் பெற்றோரே பொறுப்பாகின்றனர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு - 300/- 3ம் பரிசு - 200/-

முடிவுத்திகதி : 18.05.2021

பெயர் : ........................................

முகவரி : ........................................

பங்கு : ........................................

## விடுபட்ட எழுத்துப்புதிர்ப்போட்டி - 38

### 2திமொத்தேயு அதிகாரம் 1 - 2 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | | | | | | | | ■ | வெ |
| ■ | தீ | | | | | | | தி | |
| | | | | | சா | | | தா | |
| | | ■ | | | | | | வி | |
| | | | | | | | இ | ■ | |
| | | அ | | | | | ■ | ■ | |
| | | ஆ | | | | | | | |
| | | ■ | | | | | | அ | ■ |
| | | ■ | ■ | நி | | | | | |
| ஒ | | ■ | | | | | | | இ |

01. ம___ ___சா ன் ___ ட ___
02. வெ___வே___ ___ந் ற
03. தீ___ ___ன த் ___ன்___ டி
04. தி___ ப் ப___யி___
05. தா ___ ___
06. சா ___ றா___ ர்
07. வி___ ___றை___ ள்
08. இ___ப் ப___ று
09. அ___ ள்___ டை
10. ஆ ___ சி___ய்___ ம்
11. அ___ யா___ ழ்___
12. நி___வ___ யு___
13. இ___ தி___ ள்___ ___
14. ஒ___ ர___ ___ ய்___ ர்

முடிவுத்திகதி: 18.05.2021

"இயற்கையை அன்பு செய்வதும், பாதுகாப்பதும் கிறிஸ்தவ மதிப்பீடு ஆகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை இறையிரக்கத் திருத்தலத்தின் வரோதய நகரில் மடுமாதாவிற்கு ஓர் புதிய ஆலயம்




இற்றைக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன், வரோதயநகர் என்று பெயர் பெற்றிருக்கும் இறையிரக்கப் பங்கிற்குட்பட்ட ஒரு கிராமப்பகுதியில் மடு அன்னைமேல் கொண்ட பக்தியாலும், அந்த அன்னையை சென்று தரிசிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தாலும் தவித்த கத்தோலிக்கர் ஒருவர் அப்பகுதியில் காணப்பட்ட காணிப்பகுதியொன்றில் மடு அன்னையின் சுரூபம் ஒன்றினை வைத்து அவள் வழியாக இறைவனை மன்றாடத்தொடங்கினார். அக்காலப்பகுதியில் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்பணி. L. பிலிப் அடிகளார் இப்பக்தி முயற்சியைக் கண்ணுற்று அக்குடும்பத்தினைச் சந்தித்து அப்பகுதிவாழ் கத்தோலிக்க மக்களின் நலன் கருதி அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைக்க முயற்சிகள் மேற்கொண்டார். ஆயினும் அந்நிலப்பகுதி தொடர்பான சிக்கல்கள் எழுந்தபோது அது பற்றிய தெளிவினை ஏற்படுத்திக்கொண்டு முந்நாள் ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் உதவியோடு அந்நிலத்தினை திருஅவைக்கான உரிமையாகப் பெற்றுக்கொண்டு மரம், ஓலை இவற்றைக்கொண்ட ஒரு சிறு குடிலிலான ஆலயத்தினை அவ்விடத்தில் அமைத்து அதனை மடுமாதாவிற்கு அர்ப்பணித்தார். அன்றிலிருந்து திருகோணமலையிலிருந்து மடு சென்று அன்னையைத் தரிசிக்க முடியாது ஏங்கிய மக்களுக்கு அருள்பாலிக்கும் இடமாக மாறியது வரோதய நகர் மடு மாதா ஆலயம்.

இதனைத்தொடர்ந்து 2004ம் ஆண்டு மார்கழி மாதம் இடம்பெற்ற சுனாமி பேரழிவின் பின்னரான மீள் கட்டுமான பணிகளை இறைஇரக்கத் திருத்தலத்தில் முன்னெடுத்த அப்போதைய பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி லீயோ அடிகளார் அதன் உபபங்காக விளங்கிய வரோதய நகர் மடுமாதா ஆலயத்தினையும் அவ்வுதவிகளைக் கொண்டு மேம்படுத்தினார். அதன் பின்னர் இன்னும் அதிகமாக அறியப்படும் ஆலயமாக மாறியது வரோதய நகர் மடுமாதா ஆலயம். அதன் பின்னர் பங்குத்தந்தையராக பணியேற்ற ஒவ்வொரு அருட்பணியாளர்களும் தத்தம் காலங்களில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உதவினர். இறுதியாக தற்போதைய இறையிரக்கத் திருத்தலத்தின் பங்குத்தந்தையாக பணியாற்றும் அருட்பணி. செ. மதுராங்கன் குரூஸ் அடிகள் மடுமாதாவிற்கு வரோதய நகரில் ஓர் புதிய ஆலயம் அமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் மிகக்கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். கொரோனா பெருந்தொற்றின் தாக்கமும் அதனால் நாட்டில் ஏற்பட்ட முடக்கமும் இவரது பணிகளை இன்னும் கடுமையாக்கியது. ஆயினும் மடு அன்னை மீது பக்தி கொண்ட நன்கொடையாளர்களையும், நல் உள்ளங்களின் செப உதவியையும், பங்கு மக்களின் சோர்ந்து போகாத உழைப்பினையும் தன் துணையாகக் கொண்டு இறைவல்லமையோடு புதிய ஆலயம் அமைக்கும் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து இன்று ஓர் புதிய ஆலயத்தினை இவ்விடத்தில் அமைத்துள்ளார். 36 நிலையாக வசிக்கும் கத்தோலிக்க குடும்பங்களை தன்னகத்தே கொண்ட வரோதய நகரில் மடு அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் 18ம் திகதி ஏப்ரல் மாதம் 2021ம் நாள் மாலை 4.30 மணியளவில் மறைமாட்ட ஆயர் பேரருட்திரு நோயல் இம்மானுவல் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் உட்பட, துறவிகள் இறைமக்கள் என பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்

**வரோதய நகர் மடு அன்னையின் ஆசீர்<br>அனைவருக்கும் உரித்தாகட்டும்.**


## விவிலிய அடிப்படையில் மறைக்கல்வி வழிகாட்டல் கையேடு

**பரீட்சைக்கான மறைக்கல்விக்குப்**
**பழகிப்போன எம் பிள்ளைகளை**
**வாழ்க்கைக்கான மறைக்கல்வி நோக்கி வழிநடத்த**
**புதிய மறைக்கல்வி கையேடுகள்.**



**விவிலியத்தின் வழிவரும் விழுமியங்களை**
**நம் சமூகத்தின் மத்தியில் விதைக்க**
**இக்கையேடுகள் உதவும்**
**இலகுபடுத்தல் கருவிகளாக**
**You Tube வீடியோ Linkகுகள்**
**Smart Phone APP மூலம் வழிகாட்டல்கள்,**
**கதைகள், படங்கள் போட்டிகள் மற்றும் புதிர்கள்**
**ஒன்றின் விலை 380/=**

பெற்றுக்கொள்ள
அருளகம்,
திருமறைக்கல்வி நிலையம்
297. டொக்யாட் வீதி
திருகோணமலை


**"ஏழைகள் வசதிகள் குறைவாக இருந்தாலும் மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர்."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ben Vision Printers - 076 9..